**கவனிக்க.-** *25.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1761 - 2012 ජූනි මස 01 වැනි සිකුරාදා - 2012.06.01

*1761 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 904 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


**கவனிக்க.-** (i) பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆணடு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்)/ தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுள்ள சப்பிரகமுவ மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| I. | சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில் நுட்ப சேவையில் தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) பயிற்சித் தரம் | 20 |
| II. | சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில் நுட்ப சேவையில் தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) II 'ஆ' தரம் | |
| III | சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில் நுட்ப சேவையில் தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) பயிற்சித் தரம் | 02 |
| IV. | சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில் நுட்ப சேவையில் தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) II 'ஆ' தரம் | |

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய திறமை அடிப்படையில் பொது நிருவாகச் சுற்று நிரூபம் 15/ 90 இற்கு உரிய மாவட்டச் சனத்தொகை விகிதாசாரத்திற்கு அமையத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இப்பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர். நியமிக்கப்படுவர் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பன சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும். தற்போது நிலவும் வெற்றிடங்கள் மற்றும் எதிர் காலத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் ஆகியவற்றுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

3. **ஆட்சேர்ப்புச் செய்யும் நிபந்தனைகள் :**

3:1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

3:2 மேம்பட்ட ஒழுக்க சீலமும் சிறந்த உடல், உள ஆரோக்கியமும் உடையவராய் இருததல் வேண்டும்.

3:3 விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு அண்மித்த ஆறு வருட காலத்தினுள் குறைந்தது தொடர்ந்து மூன்று வருட காலங்கள் சப்பிரகமுவ மாகாண சபை நிருவாகப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராய் இருத்தல்.

3.4 அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அவர்கள் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி வரை எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளைப் பெறாமலும் அக்காலத்தினுள் சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுத் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டவர்களாயும் இருத்தல் வேண்டும்.

4. **வயது எல்லை.**- விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இநுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்கள் விண்ணப்பதாரிகளாகும் போது அவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

5. **கல்வி மற்றும் தொழிற்றகைமைகள்.:**

5.1 **கல்வித் தகைமைகள் :**

5.1.1 தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) பயிற்சித் தரம்:

(அ) அடிப்படைக் கல்வித் தகைமைகள்,-
க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் பழைய பாடத்திட்டத்திற்கு அமைய பிரயோக கணிதம் அல்லது

தூயகணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் விஞ்ஞானப் பாடங்கள் 03 இல் சித்திபெற்றிருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்திற்கு அமைய பௌதிக விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் விஞ்ஞானப் பாடங்கள் 03 இல் சித்தி பெற்றிருத்தல் ;

அத்துடன்

(ஆ) தேசிய தொழில் நுட்பக் (குடிசார்) சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான இலங்கைத் தொழில் நுட்பச் சேவைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

5.1.2 தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) பயிற்சித் தரம் :

(அ) அடிப்படைக் கல்வித் தகைமைகள்,-
க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் பழைய பாடத்திட்டத்திற்கு அமைய பிரயோக கணிதம் அல்லது தூயகணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் விஞ்ஞானப் பாடங்கள் 03 இல் சித்தி பெற்றிருத்தல். அல்லது புதிய பாடத்திட்டத்திற்கு அமைய இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் விஞ்ஞானப் பாடங்கள் 03 இல் சித்தி பெற்றிருத்தல்;

அத்துடன்

(ஆ) தேசிய தொழில் நுட்பக் (அளவு ஆய்வாளர்) சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான இலங்கைத் தொழில் நுட்ப சேவைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

5.2 **தொழிற்றகைமை :-**

5.2.1 தொழில் நுட்ப அதிகாரி (குடிசார்) II'ஆ' தரம்
மேலே 5.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் கீழ்க்குறிப்பிடப்படும் தொழில் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

I. மொறட்டுவை பல்கலைக்கழகம்/அம்பாறை ஹாடி நிறுவனம் ஆகிய ஒன்றினால் வழங்கப்படும் தேசிய நுட்ப (குடிசார்) டிப்புளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய எந்திரவியல் டிப்புளோமா

அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் எந்திரவியல் டிப்புளோமா

அல்லது

IV. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்புளோமா (குடிசார்)

அல்லது

V. இலங்கை எந்திரவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் எந்திரவியல் பரீட்சை I ஆம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VI. மேலே உள்ள தொழில் நுட்பத் தகைமைகளுக்குச் சமமான இலங்கைத் தொழில்நுட்ப சேவைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே 5.2.1இல் I இல் இருந்து VI வரையுள்ள தொழில்நுட்ப தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பவர்கள் அப்பாட நெறிகளைப் பின்பற்றுவதற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது அப்பாட நெறிகளைப் பின்பற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*5.2.2 தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) II 'ஆ' தரம் :*

மேலே 5.1.2 ''அ'' இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் கீழ்க் குறிப்பிடப்படும் தொழில் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

I. மொறட்டுவைப் பல்கலைக்கழகம்/அம்பாறை ஹாடி நிறுவனம் ஆகிய ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப (குடிசார்) டிப்புளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய எந்திரவியல் டிப்புளோமா (அளவு ஆய்வாளர் விடயம் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;

அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் எந்திரவியல் டிப்புளோமா (அளவு ஆய்வாளர் விடயம் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;

அல்லது

IV. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்ப டிப்புளோமா (அளவு ஆய்வாளர் விடயம் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்).

அல்லது

V. இலங்கை எந்திரவியில் நிறுவனத்தினால் நடாத்தப்படும் எந்திரவியல் பரீட்சை I ஆம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் (அளவு ஆய்வாளர் விடயம்) உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

அல்லது

VI. மேலே உள்ள தொழில் நுட்பத் தகைமைகளுக்குச் சமமான இலங்கைத் தொழில் நுட்பச் சேவைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே 5.2.2 இல் I இல் இருந்து VI வரையுள்ள தொழில்நுட்ப தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பவர்கள் அப்பாட நெறிகளைப் பின்பற்றுவதற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது அப்பாட நெறிகளைப் பின்பற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. சம்பள அளவுத் திட்டம் (பொது நிருவாகச் சுற்று நிருபம் 06/2006 (IV) இன் படி ஆகும்.

*தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) பயிற்சித் தரம்/அளவு ஆய்வாளர் பயிற்சித் தரம்: ரூபா - 13,120-145×10 - 170×11 - 240×10 - 320×10 - ரூபா 22,040* (MN-1-2006A).

*தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) II வகுப்பு "ஆ" தரம் /அளவு ஆய்வாளர் II வகுப்பு "ஆ" தரம் : ரூபா 15,005-180×4 - 240×6 - 320×11 - 360×20 - ரூபா 27,885* (MN-3-2006A).

7. **சேவை நிபந்தனைகள்**.- (1) இப்பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதியம் உரித்துடையன.

(2) இலங்கைத் தொழில் நுட்பச் சேவை யாப்பின் கீழ் இப்பதவி நிருவகிக்கப்படும். அச்சேவை யாப்பிற்கும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் நியமனம் பெறுபவர் கட்டுப்படுவர்.

(3) தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்) தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) பயிற்சித் தரம் ஆகியவற்றிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள். உரிய பாடத்திட்டத்தின் படி பெறும் கோட்பாடு சார்ந்ததும் செய்முறைப் பயிற்சி சார்ந்ததுமான ஒரு வருட காலப் பயிற்சியைத் திருப்திகரமாக நிறைவு செய்து பயிற்சிக்கால நிறைவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்பு இலங்கைத் தொழில்நுட்பச் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யும் தரமான II ஆம் வகுப்பின் "ஆ" தரத்தில் நியமிக்கப்படுவர். பயிற்சி நிறைவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்று பயிற்சிக் காலத்தினுள் வேலை, நடத்தை மற்றும் வரவு திருப்திகரமாக இருக்கும் பயிற்சியாளர்கள் பயிற்சியைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளவர்களாகக் கருதப்படுவர். பயிற்சியைத் திருப்திகரமாக நிறைவு செய்யாதவர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

*(4) II வகுப்பு "ஆ" தரத்திற்கு நியமிக்கப்பட்ட பின்பு 3 வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியதோடு நியமனம் பெற்று 5 வருட காலத்தினுள் அரச சுற்று நிருபம் 07/2007 இன் படி இரண்டாம் தேசிய மொழி பற்றிய நிபுணத்துவத்தையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.*

*8. **பரீட்சை முறை**.- (1) இப்போட்டிப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது.*

*(2) ஒவ்வொரு பதவிக்குமான போட்டிப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் இரு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் குறைந்தது (40%) நாற்பது வீதப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். ஒரு வினாத்தாளுக்கு வழங்கப்படும் புள்ளிகள் 100 ஆகும்.*

*நுண்ணறிவும் உளச்சார்பும் - காலம் 01 மணித்தியாலம் ஆகும்.*

*இவ்வினாத்தாள் எண்ணறிவு பிரச்சினை விடுவித்தல், தர்க்கிக்கும் திறன், பொது நுண்ணறிவு ஆகிய தலைப்புக்களின் கீழ் தயாரிக்கப்படும் விடயம் தொடர்புடைய குறு வினாக்களை (சிறு வினாக்களை) உள்ளடக்கியதாக இருக்கும்.*

*பொது அறிவு காலம் - காலம் 1 1/2 மணித்தியாலம் ஆகும்.*

*இவ்வினாத்தாள் சுற்றாடல், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் விஞ்ஞான அறிவு மற்றும் சர்வதேசத் தகவல்கள் பற்றிய அறிவை அளவிடும் வகையில் வினாக்கள் அமையும்.*

*9. **பரீட்சைக் கட்டணம்**.- ரூபா 450 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2003.90.01 இலக்கம் கொண்ட வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் சப்பிரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சின்/திணைக்களத்தின்/உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை எதிர்காலப் பயன்பாட்டினுக்காக உடன் வைத்திருத்தல் வேண்டும்.) செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீள அளிக்கப்படமாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*10.இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் தீர்மானத்தின் பேரில் திட்டமிடப்பட்டுள்ளபடி விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது விண்ணப்பதாரி இப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் (40%) நாற்பது வீதப் புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளையோ பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பெற்றுள்ள அப்புள்ளிகளின் கூட்டுத்தொகையின் படி ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அதி உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லாமை தெரிய வருமிடத்து அப்படிப்பட்டவர்கள் நியமனம் வழங்குவதற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். நேர்முகப் பரீடசைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.*

*11.**தவறான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய யாராவது விண்ணப்பதாரி ஒருவர் தகைமை அற்றவராகத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்போ அல்லது எச்சந்தர்ப்பத்திலாவது அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரிய வருடமிடத்து அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.*

*12.விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்திய ஆணையாளர் ஒருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர் அல்லது ரூபா 20,030 ஆரம்ப ஒன்று திரட்டிய சம்பளம் அல்லது மேலான ஆரம்பச் சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்ஆகிய ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*13.**விண்ணப்பிக்கும் ஒழுங்கு முறை**.- இவ்வறிவித்தலின் பின்னால் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவுடைய தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி :-*

I. *தொடர் இலக்கம் 01 இலிருந்து 03 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் 04 இலிருந்து மீதியுள்ள பந்திகள் மற்றைய பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைத் தமது கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும்.*

II. *உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் 2012.06.29 ஆந் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகக் கட்டடத் தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி" என்ற முகவரிக்கு*

அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பப்பத்திரங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்பத்திரங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

III. அவ் விண்ணப்பப்பத்திரத்தின் நிழற் பிரதி ஒன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் குறிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பப்பத்திரங்களும் பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் இரத்துச் செய்வதோடு, விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்தமை பற்றியும் அறிவிக்கப்படவும் மாட்டாது.

14.பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சைக் கால அட்டவணை (நேரசூசி) என்பன பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும். போதியளவு எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவிடத்து அவ்விண்ணப்பதாரிகளுக்குப் பதிவுத் தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். அப்படி இல்லாவிடின் விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் சாதாரண தபாலில் அனுப்பப்பட்டு உடனடியாக அது பற்றி குறிப்பிட்ட அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்பும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்பத்திரம், மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள், பதிவு செய்த பற்றுச் சீட்டு, அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட உங்கள் வேண்டுதற் கடிதம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளல் மிகவும் பயனுடையதாகும்.

15. எழுத்துப் பரீட்சையின் போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

16.பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நரயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட வேண்டும். அச் சட்டதிட்டங்கள் மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

17.பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

18.இவ் அறிவித்தலில் உள்ளடங்காத விடயங்கள் சம்பந்தமாகவும் மற்றும் நியமனம் வழங்குவதில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்குமான அதிகாரம் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக் குழுவைச் சார்ந்ததாகும்.

சுனேத்திரா குணவர்த்தன,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
"மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி",
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2012.06.

மாதிரி விண்ணப்பப்படிவசம்

**சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில்/தொழில்நுட்ப அதிகாரி (குடிசார்)/தொழில்நுட்ப அதிகாரி (அளவு ஆய்வாளர்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open competitive Examination for Recruitment to Posts in the Technical Service of the Sabaragamuwa Provincial Public Service- Technical Officer (Civil)./ Technical Officer (Quantity Serveyor) - 2012

சுட்டெண் [ ]

அலுவலக உபயோகத்திற்காக

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர் பார்க்கும் நகரமும் நகர இலக்கமும் :

இரத்தினபுரி - 1
கேகாலை - 2

| நகரம் | இலக்கம் |
|---|---|
| | |

(விண்ணப்பிக்கும் நகரம் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

1. 1.1 முதலெழுத்து இறுதியில் வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உ-ம் :- PERERA, A.B.C..

1.2 முழுப் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3. முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

2.4 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.5 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

3. 3.1 பால் பெண் - 1
ஆண் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : -
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.3 2012.06.29 அன்று வயது
வருடங்கள்: | | | | | மாதங்கள்: | | | நாட்கள் : | | |

4. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம் :-
I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :-----.
II. பரீட்சை சுட்டெண் :-----.
III. பெறுபேறு :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம்.-

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :-----.
II. பரீட்சை சுட்டெண் :-----.
III. பெறுபேறு :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழிற்றகைமைகள்.

| நிறுவனம் | பின்பற்றிய பாடநெறி | காலம் | பெறுபேறு (தரம்) | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. வேறு தகைமைகள் .-

7. நீர் எப்போதாவது அல்லது எவ்வித குற்றத்திற்காகவாவது நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா ?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடவும். ஆம் எனின் விபரத்தைக் குறிப்பிடுக.)

8. தற்போது அரச சேவையில் இருப்பவராயின்,

8.1 திணைக்களத்தின்/நிறுவனத்தின் முகவரி :-----.
8.2 தற்போது வகிக்கும் பதவி :-----.
8.3 சேவைக் காலம் :-----.
8.4 நிரந்தர ஓய்வூதிய உரத்துடையதா? அல்லது தற்காலிகமானதா?/என்ற விபரம்:-----.

9. பரீட்சைக் கட் டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :-

1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.
2. பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :-----.
3. செலுத்திய கட்டணம் :-----.

| பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியைத் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும். |
|---|

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவையும், சரியானவையும் என வெளிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள சில பகுதிகள் பூரணமில்லாதிருப்பினும் அல்லது தவறாகப் பூரணப்படுத்தப்பட்டிருப்பினும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும் சம்மதிக்கின்றேன். இங்கு சகல பகுதிகளுக்கும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படின் நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பாயின் தகுதியற்றவனா வேன் என்றும் நியமனம் வழங்கப்பட்ட பின்பாயின் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் ....................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி இலச்சினையினால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

12. **அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரியின் கீழ்க்குறிப்பிடப்படும் உறுதியுரை திணைக்களத் தலைவரினாலோ அல்லது அவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினாலோ சான்றுப்படுத்தப்பட வேண்டும்.**

(i) இத்திணைக்களத்தில் ...................... ஆந் திகதியிலிருந்து ................ பதவியில் சேவைபுரியும் திரு./திருமதி/செல்வி ...................................... விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை பெறவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எவ்வித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

(ii) மேற்குறிப்பிட்ட பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படின் விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

-----,
திணைக்கள /நிறுவனத் தலைவர்,
அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திகதி :----.
(தயவு செய்து திணைக்கள/நிறுவன இலச்சினையை இடவும்.)

6-146

---

## சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

### சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் விவசாய ஆலோசகர் பதவியில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் விவசாய ஆலோசகர் பதவியில் வகுப்பு III இல் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுள்ள சப்பிரகமுவ மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 39 ஆகும். ஆட்சேர்ப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் இவ் எண்ணிக்கை குறையவோ அல்லது கூடவோ இடம் உண்டு.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய திறமை அடிப்படையில் அரச நிருவாகச் சுற்று நிரூபம் 15/90 இற்கு உரிய மாவட்டச் சனத்தொகை விகிதாசாரத்திற்கு அமையத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இப்பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர். நியமனம் செயற்படும் திகதி என்பன சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

3. சம்பள அளவுத் திட்டம் .-
ரூபா - 15,005-4×180 - 6×240 - 11×320 - 20×360 ரூபா 27,886 ஆகும்.
(பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் 06/2006 (IV) மற்றும் 7/2008 ஆம் இலக்கங்களின் பிரகாரம் MN-3-2006A).

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் நிபந்தனைகள்:.**

4:1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

4:2 மேம்பட்ட ஒழுக்க சீலமும் சிறந்த உடலுள ஆரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

4:3 விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு அண்மித்த ஆறு வருட காலத்தினுள் குறைந்தது தொடர்ந்து மூன்று வருட காலங்கள் சப்பிரகமுவ மாகாண சபை நிருவாகப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

4.4 அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அவர்கள் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி வரை எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளைப் பெறாமலும் அக்காலத்தினுள் சகல சம்பள உயர்ச்சிகளையும் பெற்றுத் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டவர்களாயும் இருத்தல் வேண்டும்.

5. **வயது எல்லை.-** விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்கள் விண்ணப்பதாரிகளாகும் போது அவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

6. **கல்வி மற்றும் தொழிற்றகைமைகள்.-**

6.1 **கல்வித் தகைமைகள் :**

க.பொ.த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட வேறு ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்திகளுடன் மொத்தம் நான்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் துறைசார்ந்த இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள், மூன்றில் (3) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரேஅமர்வில் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

6.2 விவசாயத் துறை சார்ந்த கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களில் ஒன்றைப் பெற்றிருத்தல்

(i) விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் விவசாயப் பாடசாலையினால் வழங்கப்படும் இரு வருட டிப்பளோமாச் சான்றிதழ்

அல்லது

(ii) ஹாடி தொழில் நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய விஞ்ஞானம் தொடர்பான டிப்புளோமாச் சான்றிதழ்

அல்லது

(iii) அக்வயின்னாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய டிப்புளோமாச் சான்றிதழ்.

அல்லது

(iv) உயர்கல்வி அமைச்சின் தொழில் நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான இரு வருட தேசியத் தொழில் நுட்ப டிப்புளோமாச் சான்றிதழ்.

அல்லது

(v) சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விவசாயத்துறை சார்ந்த உயர் தகைமைகளுடன் சமனான தகைமை பெற்றிருத்தல்.

7. **சேவை நிபந்தனைகள்.:**

(1) இப்பதவிகள் நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது;.

(2) இலங்கைத் தொழில் நுட்பச் சேவை யாப்பின் கீழ் இப்பதவி நிருவகிக்கப்படும். அச்சேவை யாப்பிற்கும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் நியமனம் பெறுபவர் கட்டுப்படுவர்.

(3) மூன்றாம் வகுப்பிற்கு நியமனம் பெற்றதின் பின்பு மூன்று வருட காலத்திற்குள் முதலாவது வினைத் திறன் காண் தடை பரீட்சையில் சித்தியடைய வேண்டியதோடு நியமனம் பெற்று ஐந்து வருட காலத்திற்குள் அரச நிருவாகச் சுற்று நிரூபம் 07/2007 இற்கு அமைய இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியையும் பெறுதல் வேண்டும்.

8. **பரீட்சைத் திட்டம்** .- (1) இப்போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையளர் நாயகத்தினால் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நடாத்தப்படும். கோரப்பட்ட மொழி மூலம் பின்பு மாற்றம் செய்வதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்துவதற்கு மற்றும் பெறுபேறுகள் வழங்குவது பற்றிய பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியான முடிவானதாகும்.

(2) பரீட்சை இரத்தினபுரி மற்றும் கேகாலை நகரங்களில் மட்டும் நடாத்தப்படும். அந்நகர எண்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமையத் தான் பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர எண் ஆகியவற்றைத் தமது விண்ணப்பப்பத்திரங்களில் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த நகரம் பின்பு மாற்றுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 19 |
| கேகாலை | 20 |

போட்டிப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாள்களிலும் குறைந்த பட்சம் நூற்றிற்கு நாற்பது (40%) புள்ளிகள் வீதம் பெறுதல் வேண்டும். ஒரு வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

**நுண்ணறிவுத் தேர்வு** .- காலம் : 01 மணித்தியாலம் 100 புள்ளிகள்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனைத் திறன் விடயப் பகுப்பாய்வுத் திறன், ஆகியவற்றை அளவிடும் வகையில் அமைந்த வினாக்களைக் கொண்டிருக்கும். பல் தேர்வு வினாக்கள், குறும் விடை வினாக்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

**தொழில் நுட்ப வினாத்தாள்** - காலம் : இரண்டு மணித்தியாலங்கள் 100 புள்ளிகள்.

இவ்வினாத்தாள் இலங்கையில் விவசாயத்துறைக்குப் பொருத்தமான அறிவை அளவிடுவதற்காகக் கீழ்க் காட்டப்பட்டுள்ள துறைகள், எல்லாவற்றையுமோ அல்லது சில துறைகளையோ தொடர்புபடுத்தி தயாரிக்கப்படும் சுருக்கமான விடை எழுதும் வினாக்கள் கட்டமைப்பு முறையிலான வினாக்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் (சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.).

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு;
2. இலங்கையின் கால நிலை வலயம் பற்றிய அறிவு;
3. மண்ணும் தாவர போஷணையும் ;
4. நெல் பழங்கள், மரக்கறி ஆகிய பல்வேறு களப் பயிர் உற்பத்திகள்
5. பயிர் பாதுகாப்பு
6. மண் வளப்படுத்தலும் பாதுகாப்பும் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவமும்
7. பண்ணை வளர்ப்பு முறைமைகளைப் பொறிமுறைப்படுத்தல் தேனீ வளர்ப்பு பூஞ்செடி வளர்ப்பு, தரை (நிலம்) அலங்கரிப்பு)
8. கோழி வளர்ப்பு மற்றும் கறவைப் பசு வளர்ப்பின் முக்கியத்துவம்
9. விவசாய விஸ்தரிப்பு இழைய வளர்ப்பு நாற்று (கன்று) மண்டபப்படுத்தல்
10. பரம்பரை அலகுத் தொழில்நுட்பமும் விவசாய அபிவிருத்தியும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- ரூபா 450 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2003-90-01 இலக்கம் கொண்ட வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் சப்பிரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சின் அலுவலகத்தில்/திணைக்களத்தில் (உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேசச் செயலாளர் அலுவகத்தில் கட்டணத்தை செலுத்தியதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக் காரணத்தைக் கொண்டும் மீள அளிக்கப்படமாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள், மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டவர்களில் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமைகள் இல்லாத விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்திகள் இப்பதவிக்குரிய தகைமையைக் கொண்டுள்ளனர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் (40%) நாற்பது வீதப் புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளையோ பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பெற்றுள்ள அப்புள்ளிகளின் கூட்டுத் தொகையின் படி ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும் அதி உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லாமை தெரிய வருமிடத்து அப்படிப்பட்டவர்கள் நியமனம் வழங்குவதற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். நேர்முகப் பரீடசைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

*11.* பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இருக்கும் விண்ணப்பதாரிகளின் பதவிகள் மற்றும் சேவை நிலையங்கள் பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளிலும் உரியதாவதோடு, விண்ணப்பங்கள் அனுப்பியதன் பின்பு அவை பற்றி ஏற்படும் மாற்றங்கள் எவை பற்றியும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

*12.* **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய யாராவது விண்ணப்பதாரி ஒருவர் தகைமை அற்றவராகத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்போ அல்லது எச்சந்தர்ப்பத்திலாவது அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரிய வருடமிடத்து அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

*13.* விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்திய ஆணையாளர் ஒருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர் அல்லது அரச சுற்று நிருப இலக்கம் 06/2006 இன் படி மாதாந்தம் ரூபா 20,030 ஆரம்ப ஒன்று திரட்டிய சம்பளம் அல்லது அதற்கு மேலான ஆரம்பச் சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்ஆகிய ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*14.* **விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்கு முறை**.- இவ்வறிவித்தலின் பின்னால் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற் கமைய A4 (21×29cm) சாதாரண அளவிலான கடதாசிகளில் இரு பக்கங்களையும் உபயோகித்து,

(i) இலக்கம் 1 முதல் 3 வரையான பந்திகளை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 04 முதல் 9 வரையான பந்திகளை இரண்டாம் பக்கத்திலும் மிகுதிப் பந்திகள் மூன்றாம் பக்கத்ததிலும் உள்ளடக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்பத்திரம் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும் . மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்படும்.

(ii) அவ் விண்ணப்பப்பத்திரத்தின் நிழற் பிரதி ஒன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும். பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருக்கும் விண்ணப்பப்பத்திரங்களும், அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கும் பொருந்தாத விண்ணப்பப்பத்தரிங்களும் தாமதாகக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் இரத்துச் செய்யப்படுவதோடு, விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படவும் மாட்டாது.

(iii) உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் 2012.06.29 ஆந் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் "செயலாளர், சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக் குழு மாகாண சபை அலுவலகக் கட்டடத் தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் விவசாய ஆலோசகர் பதவி வகுப்பு iii இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2012 என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பப்பத்திரங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்பத்திரங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

*15.* பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சைக் கால அட்டவணை (நேரசூசி) என்பன விண்ணப்பதாரிகளும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும். போதுமான அளவு விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவிடத்து விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பதிவுத் தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அப்படி இல்லாவிடத்து விண்ணப்பதாரிகளுக்குச் சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்பட்டு உடனடியாக அது பற்றிக் குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்பும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்பத்திரம், மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள், பதிவு செய்த மற்றும் சீட்டு, அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட உங்கள் வேண்டுதற் கடிதம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளல் மிகவும் பயனுடையதாகும். பரீட்சை தொடர்பாக விண்ணப்பதாரிகள் 1968 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்கம் கொண்ட பரீட்சை சட்டத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டப்பட வேண்டியதோடு, பரீட்சார்த்திகள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களைச் சார்ந்ததாகும்.

*16.* எழுத்துப் பரீட்சையின் போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும். கடவுச்சீட்டு ஆகியவை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

*17.* பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நரயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறுபவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

18. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

19. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத விடயங்கள் சம்பந்தமாகவும் மற்றும் நியமனம் வழங்குவதில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்குமான அதிகாரம் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக் குழுவைச் சார்ந்ததாகும்.

சுனேத்திரா குணவர்த்தன,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
"மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி,"
புதிய நகரம்,
இரத்தினபுரி.

2012.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவை விவசாய ஆலோசகர் பதவியில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination for Recruitment to Posts in the Sri Lanka Technical Service of the Sabaragamuwa Provincial Public Service, Agriculture Instructor - Class III - 2012

சுட்டெண் [ ]
அலுவலக உபயோகத்திற்காக மட்டும்

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரமும் நகர எண்ணும்

| நகரம் | நகர எண் |
|---|---|
| | |

இரத்தினபுரி - 19
கேகாலை - 20

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கோரிய நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உ-ம் :- PERERA, A.B.C.

1.2 முழுப் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3. முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்: [ | | | | | | | | | | ]

1.5. தொலைபேசி இலக்கம் :-----.

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

2.4 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.5 தொலைபேசி இலக்கம் : □□□□□□□□□□

3. 3.1 பால் பெண் - 1
ஆண் - 2 □
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : -
ஆண்டு : □□□□ மாதம் : □□ திகதி : □□

3.3 2012.06.29 அன்று வயது :-
வருடங்கள்: □□ மாதங்கள்: □□ நாட்கள் : □□

3.4 தேசிய இனம் (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்) :- □

(சிங்களம் - 1 ; தமிழ்-2; இந்தியத் தமிழ் - 3; முஸ்லிம் - 4; வேறு - 5)

4. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றி விபரம் :-

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :-----.
II. பரீட்சை சுட்டெண் :-----.
III. பெறுபேறு :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம்.-

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் :-----.
II. பரீட்சை சுட்டெண் :-----.
III. பெறுபேறு :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்நுட்பத் தகைமைகள் :-.

| நிறுவனம் | பின்பற்றிய பாடநெறி | கால எல்லை | சித்தி | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. வேறு தகைமைகள் .-

7. நீர் எப்போதாவது அல்லது எவ்வித குற்றத்திற்காகவாவது நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா ?

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

(உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடவும் ஆம் எனின் விபரத்தைக் குறிப்பிடுக.)

8. தற்போது அரச சேவையில் இருப்பவராயின்,

8.1 திணைக்களத்தின் / நிறுவனத்தின் முகவரி :-----.
8.2 தற்போது வகிக்கும் பதவி :-----.
8.3 சேவைக் காலம் :-----.
8.4 நிரந்தர ஓய்வூதிய உரத்துடையதா? அல்லது தற்காலிகமானதா?/என்ற விபரம்:-----.

9. பரீட்சைக் கட் டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :-

1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.
2. பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :-----.
3. செலுத்திய கட்டணம் :-----.

பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியைத் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவையும், சரியானவையும் என வெளிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள சில பகுதிகள் பூரணமில்லாதிருப்பின் அல்லது தவறாகப் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும் சம்மதிக்கின்றேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படின், நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பாயின் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தெரியவரின் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறுகள் வழங்கப்படுவது தொடர்பாக எடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

(இ) இங்கு தரப்பட்டுள்ள எத்தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் ....................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி இலச்சினையினால் உறுதிப்படுத்தவும்.)

12. **அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரியின் கீழ்க்குறிப்பிடப்படும் உறுதியுரை திணைக்களத் தலைவரினாலோ அல்லது அவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினாலோ சான்றுப்படுத்தப்பட வேண்டும்.**

(i) இத்திணைக்களத்தில் ..................... ஆந் திகதியிலிருந்து ................ பதவியில் சேவைபுரியும் திரு./ திருமதி/ செல்வி ..................................... விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை பெறவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எவ்வித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

(ii) மேற்குறிப்பிட்ட பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படின் விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

-----,
திணைக்கள /நிறுவன தலைவர்/
அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(தயவு செய்து திணைக்கள/நிறுவன இலச்சினையை இடவும்.)

6-181

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2012 |
| | | வெள்ளி | 08.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2012 |
| | | வெள்ளி | 15.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2012 |
| | | வெள்ளி | 22.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2012 |
| | | வெள்ளி | 29.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2012 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.